# தமிழ்ச் சமூகத்தின் அமைதியான கொலையாளி

*மிதமிஞ்சிய போதைப்பொருள் பாவனையுடனான எமது யுத்தம*

தொகுத்து வழங்குபவர் கலாநிதி பார்வதி கந்தசாமி

வசந்தம் - தமிழ் உளவளத்துணை நிலையம்

**எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்**

**செப்டெம்பர் 17, 2020 மாலை 7:00 மணிக்கு சூம் இணையத்தளத்தில்**

**சந்திப்பு அடையாள எண் : 918 584 6813**

கேள்விகள் அல்லது கவலைகள் உண்டா? அழையுங்கள்: 416-847-4172

*நாங்கள் உயிர்களை இழக்கிறோம். இது வெறுமனே ஒரு குடும்பப் பிரச்சினையல்ல, இரு ஒரு சமூகப் பிரச்சினை.*

## அதிகரித்துவரும் பிரச்சினை

அளவுக்குமீறிய போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையானது ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வருகிறது. ஒரு 9-நாள் கால இடைவெளிக்குள், 16 மனிதர்கள் மிதமிஞ்சிய போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்துள்ளனர். கோவிட் -19 ஒரு ஒளிந்திருக்கும் சவாலை ரொறொன்ரோவுக்குக் கொண்டுவந்துள்ளது: தற்போதைய பெரும் தொற்றுநோய்க்கு முந்திய மாதங்களில் அதிகப்படியான போதைப்பொருள் பாவனைக்காக, துணைமருத்துவர்களுக்கான தொலைபேசி அழைப்புக்கள் மிகவும் கூடுதலாக உள்ளன. மார்ச் 2020 இலிருந்து மிதமிஞ்சிய போதைப்பொருள் பாவனையால் ஏற்பட்ட இறப்பு 85% அதிகரித்துள்ளது.*

அதிகரித்துவரும் இந்தப் பிரச்சனை கனேடியத் தமிழ்ச் சமூகக் கலந்துரையாடல்களின் தலைப்புகளிலிருந்து நழுவி விடுகின்றது. இந்த வலைத்தளக் கலந்துரையாடலானது விழிப்புணர்வை எழுப்புவதற்கும், ஆதாரபூர்வமான தகவல்களைப் பரப்புவதற்கும், மிதமிஞ்சிய போதைப்பாவனை சம்பந்தப்பட்ட இறப்புகள் பற்றி சமூகம் என்ன சொல்கிறது என்பதைக் கேட்பதற்கும் வழிசெய்யும்

இப்பக்கத்திலுள்ள எல்லாத் தரவுகளுக்கும் ஆதாரம் ஸிபிஸி

***இவைபற்றி அறிந்துகொள்ள எங்களுடன் இணையுங்கள்***

போதை அடிமைத்தனத்திற்கான உயிரியல் அடிப்படை

போதை அடிமைத்தனத்திற்கான சிகிச்சை

தடுப்பு வழிகள

ஒரு அன்புக்குரியவருக்கு எப்படி உதவலாம்?

போதைப் பாவனையினால் ஏற்படும் சமூகப் பாதிப்பு

## பேச்சாளர்கள்

### டாக்டர். இராமநாதன் லம்போதரன்



டாக்டர் லம்போதரன் அவர்கள் தமிழ்க் கலாச்சாரத்தைத் தமிழ் இளவயதினருக்குக் கற்பிக்கும் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி நடத்திவரும் ஒரு பொதுமருத்துவராவார். சமூகத்தின் மத்தியில் போதைக்கு அடிமையாதலின் விளைவுகள் மற்றும் உளநலம் போன்றவை பற்றிப் பரந்தகன்ற அறிவைப் பெற்றவர்.

### விபூஷா கிரிஸ்னந்தராஜா



விபூஷா கிரிஸ்னந்தராஜா ஒரு பதிவுசெய்யப்பட்ட ஒன்ராறியோ சமூகப் பணியாளராவார். விபூஷா கடந்த 10 வருடங்களாக உளநலப் பிரிவில் கடமையாற்றுகிறார். தற்போது விபூஷா உளநல உள்நோயாளர் சமூகப் பணியாளராகவும் அவசரப்பிரிவு நெருக்கடிகாலப் பணியாளராகவும் தொழில் புரிகிறார.

### டாக்டர். செந்தூரன் குணரட்னம்



டாக்டர். செந்தூரன் குணரட்னம் அவர்கள் ஸ்காபரோ சுகாதார வலைப்பின்னல் (எஸ் எச் என்) கட்டமைப்பில் ஒரு குழு உளச்சிகிச்சை நிபுணராவார். மேலும், டாக்டர் செந்தூரன் ரூரம் உளநல சேவைகள் அமைப்பில் சமூகத்தொடர்புத் திட்டத்தின் தலைமை மருத்துவராகப் பணியாற்றுகிறார். அத்தோடு டாக்டர.